இந்தியா? இந்தியாவா?



தலைவர் கலைஞர்

இந்தியா? இந்தியாவா?

தலைவர் கலைஞர்

வெளியீடு:
திராவிட முன்னேற்றக் கழகம்
508, அண்ணாசாலை, சென்னை-600 018.

1983

விலை ரூ. 2-00

3883
க409.5411
திரு

தொவீனு பிரிண்டர்ஸ், டாக்டர் பெசன்ட் ரோடு, சென்னை-14.

இந்நூல்.....

சென்னை பெரியார் திடலில், 24-12-1985 அன்று திராவிடர் கழகச் சார்பில் நடைபெற்ற இந்தி எதிர்ப்பு மாநாட்டில், தலைவர் கலைஞர் அவர்கள் ஆற்றிய பேருரை இந்நூல் வடிவில் தலைமைக் கழகச் சார்பாக வெளியிடப் படுகிறது.

இந்தியா?
இந்தியாவா?

இன்று தந்தை பெரியார் அவர்களுடைய நினைவு நாள். காலையில் பெரியார் அவர்களுடைய கல்லறையிலே மலர் வளையம் வைப்பதற்காக நான் வந்தபோது, வீரமணி அவர் களின் அயராத முயற்சியினால் இந்த இயக்கத்தின் கொள்கை களைப் பரப்புவதற்காக உருவாக்கப்பட்டுள்ள புதிய சாதன மான ஒலி ஒளி அமைப்புப் பிரிவினை தொடங்கி வைத்தேன். அந்த ஒலி ஒளி அமைப்புப் பிரிவில்-வீடியோபடமாக - 1968 ம் ஆண்டில், திருச்சி மாநகரில், தந்தை பெரியார் அவர் களும் பேரறிஞர் அண்ணா அவர்களும், அலங்கரிக்கப்பட்ட அழகு ரதத்திலே பவனி வந்த அந்தக் காட்சியைக் கண்ணுற்றேன்.

காட்சியை முழுமையாகப் பார்க்க முடியாமல் கண்கள் நீரால் திரையிடப்பட்டு விட்டன. அவர்கள் இருவரும் இன்றைக்கு இல்லை என்றாலும்கூட, அவர்கள் ஊட்டிய உணர்வு நம்முடைய உள்ளத்தில் ஆழப் பதிந்திருக்கின்ற காரணத்தாலும், நம்முடைய உயிர் அணுக்கள் ஒவ் வொன்றிலும் அவர்கள் பதிய வைத்த கொள்கைகள் அழி யாமல் சுழன்றடித்துக் கொண்டிருக்கின்ற காரணத்தாலும், எதற்காக அவர்கள் பல ஆண்டுக் காலம் இந்தத் தமிழ்ச் சமுதாயத்திற்குப் பணியாற்றினார்களோ, பாடுபட்டார்களோ, போராடினார்களோ, அடக்கு முறைகளை ஏற்றுக் கொண்டார் களோ, அந்தக் காரணங்களுடன் அவர்கள் வழி நின்று — தொடர்ந்து நம்முடைய இலட்சியப் பயணத்தை நிறை வேற்ற வேண்டுமென்று சூளுரை மேற்கொள்கின்ற இந்த

நாளில், மிகப் பொருத்தமாக தளபதி வீரமணி அவர்கள் இந்தி எதிர்ப்பு மாநாடு நடத்த நாள் பார்த்து நம்மை யெல்லாம் இங்கே சந்திக்க வைத்திருக்கிறார்.

உண்மைத் தாயுள்ளம் எமக்கு!

நம்முடைய மதுரை ஆதினகர்த்தர் உரையாற்றும்போது செய்யாறு இடைத்தேர்தல் முடிவு வேறு விதமாக அமைந்ததும், எனக்கும் வீரமணி அவர்களுக்கும் ஒரு தந்தி கொடுத்ததாகவும், அதிலே இன்னும் ஆறு மாத காலத்திற்கு இந்தத் தமிழ் மக்களுக்காக நாங்கள் எதையும் செய்யாமல் ஓய்வெடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருந்ததாகவும் இங்கே குறிப்பிட்டார்கள். அந்தக் காரியத்தை மதுரை ஆதினகர்த்தர் அவர்களாலேயே செய்ய முடியாத காரணத்தாலேதான் இந்த மாநாட்டிற்கு அவர் ஓடோடி வந்திருக்கிறார்.

குழந்தை தாயை உதைத்து விடுகிறது. அந்தக் குழந்தை உதைத்து விட்டு நகரும் போது பாம்பு ஒன்று குழந்தையைக் கடிக்க வருகின்றது. நம்மை உதைத்த குழந்தைதானே, பாம்பு கடிக்கட்டும் என்று தாய் பார்த்துக் கொண்டிருந்தால், அவள் தாயாக இருக்கமாட்டாள்.

அதைப் போலத்தான் உதைத்தது தமிழ்ச் சமுதாயம் தான். நம்முடைய குழந்தைதான். எனவே அந்தப் பச்சைக் குழந்தையை பாம்பு கடிக்காமல் பாதுகாக்க வேண்டியது தாயின் பாச உணர்வு ஒன்றுதான் என்ற அந்த அடிப்படையோடுதான், நானே வீரமணியோ அல்லது இந்த மேடையிலே அமர்ந்திருக்கின்ற தலைவர்களோ, எங்களுடைய பணிகளை தொய்வின்றி தொடர்ந்து நடத்திக்கொண்டிருக்கிறோமே அல்லாமல் - செய்யாறு வரும் போதும்— சில நேரங்களில் செய்யாறில் வெள்ளப் பெருக்கெடுக்கும்; சில நேரங்களில்

வறண்டு போய்விடக்கூடும். செய்யாறு வெள்ளத்தால் பாதிக்கப்படுகின்ற நேரத்தில் "பரங்கிமலை கண்டோன்மெண்டு" தேன் துளிகள் சில நாவிலே விழுந்தலும்—அவர்கள் கை விட்டாலும் இவர்கள் கைவிடவில்லை என்கின்ற அந்த உந்துதல் உணர்ச்சி எங்களுக்குக் கிடைக்கின்றது.

அந்தத் தேன் துளியும் கிடைக்காமல் போனால் கூட இந்த மாநாட்டிற்கு வராமல் இருந்து விடுவோமா? இந்த மாநாட்டிலே எடுக்கப்பட்டுள்ள முடிவுகளுக்கு ஏற்புடைய கருத்துக்களை தராமல் இருந்து விடுவோமா என்றால், இல்லை. எனவேதான் கைமாறு கருதி — ஆட்சிப் பொறுப்பிலே அல்லது வேறு சில பதவிப் பொறுப்பிலே தமிழ் நாட்டு மக்கள் நம்மை அமர்த்த வேண்டும் என்ற காரணத்திற்காக — நாம் பணிகளிலே ஈடுபட வில்லை. அப்படி அமர்த்தத் தவறினால் அதற்காக பணியாற்ற முடியாது என்று சூளுரை மேற் கொள்வது சரியல்ல, முறையல்ல, அது பெரியார் வகுத்த வழி அல்ல; அண்ணா அவர்கள் வகுத்த நெறியுமல்ல.

தொய்வின்றித் தொடரும் பணிகள்

எனவேதான் அதிகாரம் வேண்டும்; ஆட்சிப்பொறுப்பு வேண்டும் என்றால், யாருக்கு? எங்களுக்கு அல்ல; தமிழர் களுக்கு வேண்டும். தமிழ்மொழிக்கு வேண்டும். நாங்கள் அதற்காக எங்கள் உயிர் மூச்சு கடைசியாக பிரிகின்ற வரை யில், எவ்வளவு தான் சோதனைகள் வந்தாலும், தொடர்ந்து பணியாற்றிக் கொண்டிருப்போம் என்பதைத்தான், பெரியார் திடலில் நின்று, அவரது நினைவு நாளில் நடக்கின்ற இந்த மாநாட்டில், தமிழ்ச் சமுதாயத்துப் பெருங்குடி மக்களே உங்கள் காலடியில் நான் காணிக்கையாக வைக்கிறேன்.

இங்கே காலை முதல் இதுவரையில் இந்தி ஆதிக்கத்தைக் குறித்தும், இந்தி ஆதிக்கம் இந்தி பேசாத மாநிலங்களில்

பரவுமேயானால் எத்தகைய தீங்குகள், இடையூறுகள் ஏற்படக் கூடும் என்பதைப் பற்றியும், இந்தியின் அலங்கோலம் - இந்தி மொழிக்கு உரிய தகுதியற்ற தன்மைகள் குறித்தும் நண்பர்கள், தலைவர்கள் விரிவாக உரையாற்றியிருக்கிறார்கள்.

ஏறத்தாழ 47 ஆண்டுகளுக்கு மேலாக இந்தி மொழி எத்தகைய மொழி என்பது குறித்தும், அது இந்தியத் துணைக் கண்டம் என்று கூறப்படுகிற பெரிய நாட்டில் இங்கேயிருக்கின்ற எழுபது கோடி மக்களுக்கு மத்தியிலே ஒரு ஆட்சி மொழியாக இருக்க தகுதி படைத்த மொழியா என்பது குறித்தும் ஆய்வுகள் நடைபெற்று, விவாதங்கள் நடைபெற்று, அது ஒரு தகுதியற்ற மொழி, இலக்கணம் அற்றமொழி, இலக்கியம் அற்றமொழி, தொன்மையற்ற மொழி, தொல்லை தரக்கூடிய மொழி என்றெல்லாம் ஆராய்ச்சியாளர்கள், அறிஞர் பெருமக்கள் எடுத்துக் கூறினார்கள். இப்போதிருக்கின்ற நிலைமை - இந்தியை நுழைய விடலாமா? வேண்டாமா? என்பதுதானே தவிர இந்தி எப்படிப்பட்டது என்ற ஆராய்ச்சியிலே ஈடுபடுவதல்ல.

இந்தி புகுந்தால் நாடு உருப்படாது

கிராமப்புறத்திலே உள்ள சிலர் ஆமை புகுந்த வீடு உருப்படாது என்பார்கள். அதைப்போல இந்தி புகுந்தால் தமிழ்நாடு உருப்படாது என்று சொன்ன பிறகு, ஆமை எப்படி இருக்கும் என்றெல்லாம் வர்ணித்துக் கொண்டிருக்கத் தேவையில்லை அல்லவா? அதைப் போலத்தான் இந்தி வந்தால் தமிழ்நாடு மாத்திரம் அல்ல; இந்தியாவில் உள்ள இந்தி பேசாத மாநில மக்கள் அத்தனை பேரும் இரண்டாந்தர குடி மக்களாக ஆகிவிடுவார்கள்; எனவே இந்தியை ஏற்க முடியாது என்கின்ற பெரும் போராட்டத்தை இந்தியாவிலே உள்ள மற்ற மாநிலங்களுக்கெல்லாம் வழி காட்டுகின்ற வகையில், 1938-ஆம் ஆண்டு தொடங்கி இன்று வரையிலே நம்முடைய இயக்கம் நடத்திக் கொண்டிருக்கிறது. அது

திராவிடர் கழகத்தின் பெயரால், திராவிட முன்னேற்றக் கழகத்தின் பெயரால், அல்லது இந்தி எதிர்ப்பு போராட்டக் குழு என்ற பெயரால் நடைபெறுகின்ற இந்தப் போராட்டத்திற்கு ஒரு முடிவே கிடையாதா என்ற ஆதங்கத்தின் அடிப்படையிலே தான், நம்முடைய தளபதி வீரமணி அவர்கள் இன்றைக்கு நடைபெற்றுக் கொண்டிருப்பது கடைசி மாநாடு என்று குறிப்பிட்டார்கள். அதிலே ஒரு நிருத்தம்.

இது எனக்கும் சேர்த்து கடைசி மாநாடு என்று அவர் சொல்லி விடுவாரேயானால் அது சரியல்ல; இங்கே நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களுக்கு திராவிடர் கழகம் போராட்ட வடிவம் கொடுக்கின்ற நேரத்தில் - அதைப் போலவே போராட்ட வடிவம் கொடுக்க திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு ஒரு மாநாடு தேவைப்படும். அது திராவிட முன்னேற்றக் கழகம் மொழிப் பிரச்சினையிலே நடத்துகின்ற கடைசி மாநாடாக இருக்கும் என்ற காரணத்தினால்தான், இது திராவிடர் கழகம் நடத்துகின்ற கடைசி மாநாடாகவும் - இந்தி எதிர்ப்பு போராட்டத்திற்கு திராவிட முன்னேற்றக் கழகம் நடத்துகின்ற கடைசி மாநாடு எப்போது என்பதை அறிவிக்கும் நாள் வெகு விரையில் வரும் என்றும், நம்முடைய தளபதி வீரமணி அவர்களுக்கு நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இன்றைக்கு இங்கே நிறைவேற்றப்பட்டிருக்கின்ற தீர்மானத்தின் மைய இழை என்ன? இவைகளை எதிர்த்து யாராவது ஆத்திரப்படுவார்களானால் நான் அவர்களுக்குச் சொல்ல விரும்புகின்றேன்.

ராஜாஜியின் எச்சரிக்கை

1965 ஆம் ஆண்டு ஜனவரி 1ஆம் தேதி மூதறிஞர் ராஜாஜி அவர்கள் தன்னுடைய "சுயராஜ்யா" இதழிலே

எழுதிய கட்டுரையிலே-"தென்னக மக்கள் தாமாக விரும்பாத வரையில் அவர்கள் மீது நாங்கள் ஒரு போதும் இந்தியைத் திணிக்க மாட்டோம் என் ப து நேருவின் சாசனம். ஆனால் பிரிட்டானியப் பேரரசர் ஜானின் மாக்னகார்ட்டாவுக்கு ஒப்பான அந்த வாக்குறுதிக்கு மாறுபட்ட ஒரு சட்டம் செயலாவதைத் தான், 1965 ஜனவரி 26 காணப்போகிறது. நல்ல நாட்டுப்பற்றுள்ள – முன்னேறியுள்ள இந்தியகுடிமக்கள் மூன்று கோடி பேரை (தமிழர்களை) கோபம் கொள்ள — பிரிவினைக் காரர்களாக மாற்றும் சட்டமே இது. கட்டாயமாக அரசியல மைப்புச் சட்டத்தின் 17-ஆம் பிரிவு —ஆட்சி மொழி பற்றிய பிரிவு — அராபிக்கடலில் தூக்கி எறியப்பட வேண்டும்" என்று எழுதினர்.

இங்கே கூட பேசும்போது ஒரு மாணவத் தம்பி சொன்னர்; இந்தப் பிரிவை குப்பைக் கூடையிலே போட வேண்டுமென்று சொன்னர். குப்பைக்கூடையிலே போட்டால் கூட யாராவது எடுத்து விடுவார்களோ என்று ஐயமுற்றுத் தான், ராஜாஜி அவர்கள், இதனை அராபிக்கடலில் தூக்கி எறிய வேண்டுமென்று சொன்னர். அதாவது அரசியல் சட்டத்தின் 17 வது பிரிவு அராபிக்கடலில் தூக்கி எறியப் பட வேண்டும் ஏன்று எழுதினர்.

அரசியல் சட்ட 17-வது பிரிவு என்ன?

17-வது பிரிவு என்ன?

அரசியல் சட்டத்தின் 343(1) என்ற இந்தப் பிரிவின்படி -

The official Language of the Union shall be Hindi in Devanagari Script.

இந்திய யூனியனுடைய ஆட்சி மொழியாக இந்தி மொழி தான் இருக்க வேண்டும். இதுதான் இந்த 17-வது பிரிவு;

மொழி பற்றிய பிரிவு. இந்த மொழி பற்றிய பிரிவை தூக்கி எறிந்துவிட்டால் - இங்கே நிறைவேற்றப்பட்ட விளக்கமான தீர்மானங்கள் எல்லாம்கூடத் தேவையில்லை.

அது தூக்கி எறியப்பட்டு விடுமேயானால் அந்தந்த மாநில மொழிகள் - அந்தந்த மாநிலங்கள் ஆட்சிமொழித் தகுதியோடு வளர்ச்சி பெற்று, வளம் பெற்று, அறிவியல் வளம் பெற்று, வளர்க்கப்படுமேயானால், மத்திய அரசோடு தொடர்பு கொள்கின்ற ஒரு மொழியாக ஆங்கிலம் ஒன்று போதும் என்பதுதான், அரசியல் சட்டத்தின் 17வது பிரிவு அராபிக் கடலில் தூக்கி எறியப்பட வேண்டும் என்ற ராஜாஜியின் கூற்றாகும். அதைத்தான் இன்றைக்கு நாமும் சொல்கிறோம்.

இந்தி எதிர்ப்பு என்றால் என்ன?

17 வது பிரிவு தூக்கி எறியப்படுகின்ற காரணத்தால் இந்தி மொழிக்கு ஒன்றும் ஆபத்தில்லை. எப்படியென்றால் எப்படி தமிழகத்தில் தமிழ் வாழுமோ வளருமோ அதைப் போல— மேற்கு வங்காளத்தில் எப்படி வங்கமொழி வாழுமோ வளருமோ அதைப்போல —ஆந்திரத்திலே தெலுங்கு மொழி எப்படி வாழுமோ வளருமோ அதைப்போல — உத்திரப் பிரதேசத்தில், மத்தியப்பிரதேசத்தில் இந்திமொழி வாழும், வளரும். அதற்கு யாரும் தடையாக இருக்கப் போவதில்லை. இந்தியை எதிர்ப்பது என்றால், நாங்கள் எல்லாம் சேர்ந்து இங்கேயிருந்து படை எடுத்து உத்திரப்பிரதேசம் சென்று, அங்கே இருக்கின்ற இந்தியை எதிர்ப்பது என்று பொருள் அல்ல. நீ அங்கேயே இரு; இங்கே வராதே என்று தடுப்பது தான் பொருள்.

இதுதான் இந்தி எதிர்ப்பே தவிர, பீகாரில், ம. பிரதேசத்தில் உத்திரப்பிரதேசத்தில் இருக்கின்ற இந்தியை சேரன் செங்குட்டுவன் படையெடுத்துச் சென்றானே, அதைப்போல படையெடுத்துச் சென்று, அங்கேயிருக்கின்ற இந்தியை அழித்து

விட்டுத் திரும்புவோம் என்று சூளுரைப்பது அல்ல இந்த மாநாட்டின் குறிக்கோள். அங்கே இருக்கின்ற இந்தி அங்கேயே இருக்கட்டும். இங்கே இருக்கின்ற தமிழ் இங்கேயே இருக்கட்டும். ஆந்திரத்தில் இருக்கின்ற தெலுங்கு அங்கேயே இருக்கட்டும். அவைகள் மற்ற மாநில மொழிகளோடு—மற்ற மொழிக்காரர்களோடு மோதி ஆதிக்கம் செலுத்தி, அவர்களை இரண்டாந்தர குடிமக்களாக ஆக்குகின்ற அந்தச் செயலை நாங்கள் அனுமதிக்கமாட்டோம்.

உ. பிரதேசத்திலும், மத்திய பிரதேசத்திலும் ஆதிக்கம் செலுத்திக் கொண்டிருக்கின்ற இந்திமொழி, அகில இந்தியாவிலே இருக்கின்ற எல்லா மொழிகளையும் காலடியிலே போட்டு, நான்தான் கிரீடம் சூட்டிக் கொள்வேன்; மற்ற மொழிக்காரர்களெல்லாம் எனக்கு கொத்தடிமைக்காரர்களாக இருக்க வேண்டும் என்று கூறுகின்ற அந்த கொடுஞ்செயலைத்தான் நாங்கள் எதிர்க்கிறோம் என்றால், இதற்கு வேறு காரணம் ஒன்றுமில்லை. நாங்கள் இரண்டாந்தரக் குடிமக்களாக ஆகிவிடக்கூடாது என்பதுதான்.

இரண்டாந்தரக் குடிமக்களுக்கு இந்தி!

இரண்டாந்தரக் குடிமக்கள் ஆவதென்றால் என்ன? அவர்களுக்கு இந்தி தாய்மொழி; நமக்குத் தமிழ் தாய்மொழி. இந்தியைத்தாய்மொழியாகக் கொண்டவன் அரசு அலுவல்களுக்காக இந்தியைப் பயின்று அதிலேபாண்டித்தியம் பெற்று ஆற்றலாளனாக ஆனால் அவனுக்குக் கிடைக்கூடிய வேலை வாய்ப்புகள் எவ்வளவு எளிதாகக் கிடைக்கும் என்பதும்; தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட நாம் இந்தியை அரசு அலுவல்களுக்காகப் படிப்பதென்றால் நமக்கு அது எவ்வளவு சிரமமான காரியம் என்பதும் எளிதில் விளங்கக் கூடிய ஒன்றுதான்.

எனவேதான் இந்தக் கஷ்டம் உங்களுக்கும் இருக்கட்டும். நாங்களும் ஆங்கிலம் படிக்கிறோம்; நீங்களும் ஆங்கிலம் படியுங்கள். ஆங்கிலத்திலே உங்களுக்குத் தகுதி இருந்தால் நீங்கள் அந்த அலுவலுக்கு வாருங்கள். எங்களுக்குத் தகுதியிருந்தால் நாங்கள் வரலாம். ஆகவே இருவருக்கும் இயைடல் ஒரு சமத்துவத்தை ஏற்படுத்த-நீ முதற்குடிமகன்; நான் இரண்டாந்தரக் குடிமகன் என்ற நிலையில்லாத ஒரு சமத்துவத்தை ஏற்படுத்த இன்றைக்குப் பயன்படுத்தக் கூடிய ஒரு கருவிதான் ஆங்கிலம். அதுதான் காரணமே தவிர ஆங்கிலத்தின் மீது மோகங் கொண்டு அல்ல; இருநூறு ஆண்டுக்காலம் இந்தியாவை ஆண்டானே அவனுடைய மொழி இங்கே இருக்க வேண்டும் என்பதற்காக அல்ல.

வெள்ளைக்காரன் புகுத்திய ஆங்கிலத்தை அப்புறப்படுத்த வேண்டுமென்றால் அவன்போட்டதண்டவாளங்களெல்லாங் கூட அப்புறப்படுத்திடலாமா என்று கூட ஒருமுறை ராஜாஜி கேட்டார்.

அதைப் போல ஆங்கில மொழியினால் நமக்குப் பயன் ஏற்பட்டிருக்குமேயானால், அந்தப் பயன் தமிழ்க் குடிமகன் குறிப்பிட்டது போல் தமிழின் பெருமையை அழிக்க அல்ல; தமிழின் வளத்தை அழிக்க அல்ல, தமிழ் வளரவும் அதே நேரத்தில் மத்தியிலே உள்ள ஆட்சியோடு தொடர்பு கொள்ள ஒரு தொடர்பு மொழியாக — இணைப்பு மொழியாக ஆங்கிலம் இருக்க வேண்டும் என்பதை நாம் கோடிட்டுக் காட்டுகின்றோம்.

"தேசிய இனம்" என்றால் என்ன?

தாய் மொழிப் பற்று என்பது சாதாரணமானதல்ல. 'தேசிய நீரோட்டம்' இன்றைக்குப் பேசப்படுகிறது. 'தேசிய இனம்' என்னும் சொல் இன்றைக்குப் புழக்கத்தில் இருக்கிறது. இதைப் பற்றி வரலாற்றுப் பேராசிரியன் டாயின் பீ ஹர்

அழகான கருத்துச் சொல்கிறான். தேசிய இனம் என்றால் என்ன? தேசிய இனத்தினுடைய அடிப்படை என்ன என்பதைப் பற்றி குறிப்பிடும்போது டாயின்பீ சொல்கிறான்.

> "The growing consciousness of Nationality had attached itself neither to traditional frontiers nor to new geographical association, but almost exclusively to the mother tongue"

இது வரலாற்றுப் பேராசிரியன் டாயின்பீயினுடைய கருத்து.

"வளர்ந்து வரும் தேசிய இன உணர்வு" என்பது தொன்மையான எல்லைக்கோடுகள் காரணமாகவும், பூகோளத் தொடர்பு காரணமாகவும், ஏற்படவில்லை. தாய்மொழியின் காரணமாக மட்டுமே ஏற்பட்டிருக்கிறது".

தாய்மொழியின் காரணமாக ஏற்படுகின்ற தேசிய உணர்வு இந்தியாவிலே ஒரே தேசிய உணர்வாக இருக்க முடியுமா என்றால் முடியாது. ஏனென்றால் இந்தியாவிலே பல தாய் மொழிகள் இருக்கின்றன. நான் தொடகத்திலே குறிப்பிட்டதைப் போல் தமிழைத் தாய் மொழியாக கொண்ட நாம், வங்க மொழியைத் தாய் மொழியாகக் கொண்ட வங்காள மக்கள், தெலுங்கைத் தாய் மொழியாகக் கொண்ட ஆந்திர மக்கள், கன்னடத்தைத் தாய்மொழியாகக் கொண்ட கர்நாடக மக்கள் -இப்படிப் பல தாய்மொழிகள் இந்தியாவிலே இருக்கின்றன. டாயின் பீயினுடைய கருத்துப்படி பல தேசிய இனங்கள் இந்தியாவில் இருக்கின்றன. அதைத் தான் 'Nationality 'தேசிய இன உணர்வு' என்று குறிப்பிடுகிறோம்.

'Nationality' என்பதற்கும் 'Nationalism' என்ற சொல்லுக்கும் வேறுபாடு உண்டு. Nationality' என்றால் தேசிய இன உணர்வு' 'Nationalism' என்றால் தேசிய இனத்திற்கான ஒரு தனி நாடு.

நாம் இப்போது Nationality யில் இருக்கிறோம். 'இதனால் 'Nationalism' தனி நாடு தோன்றிவிடுமோ என்கின்ற அச்சம் யாருக்காவது ஏற்படுமேயானால், டாக்டர் அம்பேத்கார் அதற்கு நல்ல விளக்கம் தருகிறார்.

'Nationality' means consciousness of kind, awareness of the existence of that tie of kinship. "Nationalism" means the desire for a separate national existence for those, who are bound by this tie of kinship.

Nationality does not in all cases produce Nationalism"

அதாவது.

❊ "தேசிய இன உணர்வு, ஒற்றுமைப் படுத்தக் கூடியதாக அமைந்த தாகும்." (நெஷனலிட்டி) "நெஷனலிசம்" என்ற நாட்டு உணர்வு-உறவுடன் ஒன்றுபட்டுள்ள வர்கள் ஒரு தனிநாட்டை உருவாக்க வேண்டுமென்ற குறிக்கோளை உடைய தாகும்."

❊ "தேசிய இனம் என்பதாலேயே ஒரு தனிநாட்டுணர்வை எல்லா சமயங்களிலும் அந்த உணர்வு உருவாக்குவதில்லை."

— என்று அம்பேத்கார் குறிப்பிட்டிருக்கிறார்.

நாம் தேசிய இன உணர்வு தேவை என்கிறோம் தேசிய இன உணர்வு தேவை என்று செல்லுகிற நேரத்தில் நம் முடைய தமிழ்த் தேசிய இன உணர்வு தேவை என்கிறோம். தமிழ்த் தேசிய இன உணர்வுக்கு இடமில்லையென்றால், மொழி அடிப்படையிலே பல்வேறு கலாச்சாரங்கள், பல்வேறு பண் பாடுகள், கலை, இலக்கியம், வரலாறு இவைகளுக்குரிய மக்கள் இந்தியாவிலே இன்றைக்குப் பல்வேறு மாநிலங்களிலே இருக் கிற நிலையை ஒத்துக் கொள்ளாமல் 'இவையெல்லாம் தேசியங் கள் அல்ல; ஒரே தேசியம் தான் — இந்திய தேசியம் தான்; அந்த அடிமைக் கட்டுக்குள்தான் அனைவரும் இருக்கவேண்டும் என்றால், எங்களுடைய தமிழ்த் தேசிய இன உணர்வை நாங்கள் பெறவேண்டுமேயானால் - அதற்கு இன்றைக்கு இந்தியா - இந்த அமைப்பு இடந்தரவில்லை என்றால் — நாங்கள் 'Nationalism, என்ற அந்தக் கோட்பாட்டுக்குத் தள்ளப்பட்டு விடுவோமோ என்கிற பயம் எங்களுக்கு ஏற்படுகிறது.

அப்படி எங்களைத் தள்ளுகிற முயற்சியிலே மத்திய அரசு - இந்தி ஆதிக்க அரசு ஈடுபடுகிறதோ என்றும் சொல்லத் தோன்றுகின்றது!

எனவேதான் இன்றைக்குத் தமிழகத்திலே உருவாகியிருக் கின்ற இந்த எழுச்சி திடீரென்று நேற்றோ, நேற்று முன் தினமோ உருவானதல்ல. நாற்பத்தேழு நாற்பத்தெட்டு ஆண்டுக் காலமாகத் தொடர்ந்து உருவாகி வருகின்ற ஒரு மாபெரும் எழுச்சியாகும். இந்த எழுச்சி இன்றைக்கு இந்தியா விலே ஆண்டு கொண்டிருக்கின்ற மத்திய அரசால் பழிக்கப் படுகிறது அல்லது அலட்சியப்படுத்தப்படுகிறது.

இனியும் அப்படிப்பட்ட அலட்சியம் மத்திய அரசுக்கு கூடாது என்று எச்சரிக்கின்ற வகையிலேதான் இந்த மாநாடு இன்று திராவிடர் கழகத்தின் சார்பில் பெரியார் திடலில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

இன்றைக்கு எழுப்பப்படுகின்ற மிக முக்கியமான பிரச்சனை — நண்பர் செல்வேந்திரன் குறிப்பிட்டதைப்போல் இந்தித் திணிப்பு கூடாது என்று நாம் சொல்ல, இந்தியை நாங்கள் திணிக்கவில்லை என்று மத்திய சர்க்கார், அல்லது மத்தியிலே உள்ளவர்கள், அல்லது இந்தி வெறியர்கள் சொல்ல — இப்படிப்பட்ட ஒரு போராட்டம், வாக்குவாதம் இந்திபேசாத மாநில மக்களுக்கும், இந்தி ஆதிக்கக்காரர்களுக்கும் இடையிலே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

நேருவின் வாக்குறுதி!

'இந்தியை இந்தி பேசாத மாநில மக்களிடையே திணிக்க மாட்டோம்' என்கிற வாக்குறுதியைச் சாதாரணமானவர்கள் வழங்கவில்லை. ஆசியாவின் ஜோதி, அலகாபாத் பண்டிதர் — சாதாரண நிலையிலே அல்ல; இந்தியாவின் பிரதமர் என்கின்ற நிலையிலே இருந்து வழங்கிய வாக்குறுதி 'இந்தி பேசாத மாநில மக்கள்மீது இந்தியைத் திணிக்கமாட்டோம்' என்பதாகும்.

ஆனால் கடந்த இருபது ஆண்டுக் காலமாக நேரு அவர்களுடைய வாக்குறுதி எந்த வகையில் நிறைவேற்றப் பட்டிருக்கிறது என்பதை நாம் ஆராயத்தான் வேண்டும். ஆராய்வதற்கு முன்பு தமிழகத்திலே இன்றைக்கு எழுந்துள்ள இந்த உத்வேகத்தை — மொழிப் போராட்டத்திற்கு மீண்டும் கால் கோள் விழா நடைபெறுகின்ற இந்தக் காரியத்தைச் சில பேர் இரண்டு மூன்று மாதங்களுக்கு முன்பு கேலி பேசவும் செய்தார்கள்.

ஒரு மூன்று மாதக்காலத்திற்கு இடையில் நிலைமை எப்படி மாறியிருக்கிறது என்பதற்கு என்னுடைய கையிலே இருக்கின்ற இரண்டு 'ஆனந்த விகடன்' பத்திரிகைகளே போதுமான சான்றாகும்.

'ஆனந்த விகடன்' பத்திரிகை மீது எனக்கொன்றும் காழ்ப்பில்லை. விவகாரங்களை நடுநிலையோடு நாகரிகமாக

எழுதக் கூடிய வார ஏடுகளில் ஒன்று அந்த பத்திரிகை என்பதில் என்னைப் பொறுத்த வரையில் இருவேறு கருத்துக்களுக்கு இடமில்லை!

'ஆனந்த விகடன்' ஏட்டில் 29-9-85ல் ஒரு தலையங்கம் தீட்டினர்கள். அத்தலையங்கத்தின் தலைப்பு "நேரங்கெட்ட நேரத்தில்...." என்பதாகும். வாசகம் பின்வருமாறு:

"இலங்கையில் நடக்கும் படுகொலைகளால் தமிழ் நெஞ்சங்கள் ஈரமாக உள்ள நேரத்தில், திராவிடர் கழகம் இந்தி எதிர்ப்புப் போராட்டம் நடத்தியிருக்கிறது. ரயில் நிலையங்களில் இந்தியில் எழுதப்பட்டுள்ள ஊர்ப் பெயர்களை தார்பூசி அழிக்கக் களத்தில் இறங்கியிருக்கிறது.

இப்படியொரு போராட்டம் அவசர அவசரமாகத் திராவிடர் கழகம் நடத்த வேண்டிய அவசியம் என்ன வென்று புரியவில்லை....."

"எதுவாக இருப்பினும், இந்தியை எதிர்த்துப் போராட்டம் நடத்துவதற்கு உரிய தருணம் இதுவாகப் படவில்லை."

மூன்று மாதத்திற்கு முன்பு 29-9-85ல் ஆனந்த விகடன் தீட்டிய தலையங்கம் இது.

அதே ஆனந்த விகடன் 8-12-85 "இந்தி எதிர்ப்பு" என்ற தலைப்பில் ஒரு தலையங்கம் தீட்டுகிறது. அதில் உள்ள வாசகம், பின் வருமாறு:

"மத்திய அரசு இந்தியைத் திணிக்க முயல்வதும் தமிழகத்திலிருந்து எதிர்ப்புக் கிளம்பியவுடன், 'யாரோ தெரியாமல் நடந்துகொண்டு விட்டார்கள்..... அரசு கொள்கை அது அல்ல' என்பது போல வாபஸ் பெறுவதும் அடிக்கடி நடந்து வருகின்றன. ஆனால், விரைவிலேயே

இந்த எதிர்ப்புகளுக்கு அடங்காமல் 'திணிப்பு முயற்சி' வலுப் பெற்று விடுமோ என்று சந்தேகப்படத் தோன்று கிறது.

இந்தி எதிர்ப்பு விஷயத்தில் தமிழகம் தனிமைப் பட்டு நிற்கிறது. தமிழ் நாட்டைப் போல வேறு எந்த மாநிலமும் இந்தி எதிர்ப்பு விஷயத்தில் தீவிர அக்கறை செலுத்துவதில்லை. இப்படித் தனிமைப்பட்டு நின்று எதிர்ப்பு தெரிவிப்பது எத்தனை காலத்துக்கு முடியும்? இதைத் தமிழக அரசியல் அறிஞர்கள் எண்ணிப்பார்க்க வேண்டிய நேரம் வந்துவிட்டது.''

அந்தத் தலையங்கம் - மூன்று மாதத்திற்கு முன்பு - 'நேரங் கெட்ட நேரம்'; இந்தத் தலையங்கம் - மூன்று மாதத்திற்குப் பிறகு - '' இந்தியை எதிர்க்க வேண்டிய நேரம் தமிழக அறிஞர்களுக்கு வந்துவிட்டது'' என்று எழுதப்படுகிறது.

ஆகவே ஆனந்த விகடனே திருந்தியிருக்கிறதென்றால் - மூன்று மாதத்திற்கு முன்பு எழுதிய தலையங்கத்திற்கு மாறாக இன்னொரு தலையங்கத்தை எழுதியுள்ளது; 'நேரங் கெட்ட நேரம்' என்று சொன்னவர்களே, 'நேரம் வந்து விட்டது', என்று அழைத்திருக்கிறார்களென்றால், விகடனே அழைத்த பிறகு வீரர்களே நீங்கள் வீட்டிலே அயர்வாக இருக்கலாமா என்றுதான் நான் உங்களையெல்லாம் பார்த்துக் கேட்கிறேன்.

விகடன் மீது கோபத்திலோ அல்லது கேலி செய்ய வேண்டும் என்பதற்காகவோ சொல்லவில்லை. அன்றைக்கு அவர்களுக்கு அப்படித் தெரிந்தது. இலங்கைத் தமிழர் பிரச்சனை இருந்தது; எனவே தான் இது நேரமல்ல என்று சொன்னோம் ஏன்று விகடன் சொல்லலாம்.

இரண்டு பிரச்சனைகளும் முக்கியம்!

இலங்கைத் தமிழர் பிரச்சினை இன்றைக்கும் முடிந்து விடவில்லை. இன்னும் மோசமாக இருக்கிறது. வீ ர ம ணி அவர்கள் தார்ச்சட்டியோடு புகை வண்டி நிலையத்திற்குச் சென்று இந்தி எழுத்துக்களை அழித்தபோது ஒரு நாளைக்கு ஐந்து பேர் இலங்கையிலே செத்துக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது இந்தியை எதிர்ப்பது ''நேரங்கெட்ட நேரம்'' என்றது விகடன்.

இன்றைக்கு இந்த மாநாடு நடைபெறுகின்ற நேரத்தில், இந்தியை எதிர்த்திட நேரம் வந்துவிட்டது என்று விகடன் தலையங்கம் எழுதும் பொழுது, ஒரு நாளைக்கு ஐம்பது பேர் இலங்கையிலே தமிழர்கள் செத்துக் கொண்டிருக்கிறார்கள்.

இலங்கைத் தமிழர்களின் பிரச்சினையையும் கவனிக்க வேண்டிய பொறுப்பு நமக்கு இருக்கிறது. அதே நேரத்தில் இங்கேயுள்ள தமிழையும் தமிழ் இனத்தையும் காப்பாற்ற வேண்டிய பொறுப்பும் ந ம க் கு இருக்கின்றது. கையிலே ஆயுதம் பலமாக இருந்தால்தான் எதிரியை வீழ்த்த முடியும். அதேபோல இலங்கையிலே இருக்கின்ற சிங்கள வெறியனை வீழ்த்த வேண்டுமேயானால் இங்கே தமிழினம் இந்தி ஆதிக்கத்தால் அழிந்து விடாமல் இருக்க வேண்டும் என்ற அந்த உண்மையையும் உணரவேண்டும்.

நமக்கு எத்தனையோ கடமைகள்; எத்தனையோ பிரச்சினைகள். திராவிடர் கழகமானாலும், திராவிட முன்னேற்றக் கழகமானாலும் அல்லது வேறு அரசியல் கட்சிகளானாலும், அல்லது அரசியல் கட்சிகளைச் சாராத தமிழ் அறிஞர்கள் ஆனாலும், அவர்களுக்கு இன்றைக்கு இருக்கின்ற பெரும் பொறுப்புகள் இலங்கையிலே இருக்கின்ற தமிழனைக் காப்பாற்றவது மாத்திரமல்ல; இன்றைக்கு இங்கே அலைபாய்ந்து கொண்டிருக்கின்ற இந்தி ஆதிக்கப்பெருவெள்ளத்தை அணை போட்டுத் தடுக்க

வேண்டிய கடமையும் பொறுப்பும் நமக்கு ஏற்பட்டிருக்கிறது என்பதை நாம் உணராமல் இருப்போமேயானால், எதிர் காலத்தைப் பற்றி நாம் நினைக்காதவர்கள் என்கின்ற அந்த அவக்கேட்டிற்கு ஆளாவோம்.

கொடுத்த வாக்குறுதிகள் கொஞ்சமா?

எப்படிக் கொஞ்சம் கொஞ்சமாக வாக்குறுதிகள் மீறப் பட்டு வந்திருக்கின்றன? நான் தொடக்கத்திலே கூறியதைப் போல் பண்டித நேரு அவர்கள் 1959 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 7 ஆம் நாள் நாடாளுமன்றத்தில் ஒரு தனிநபர் விவாதத்தில் குறுக்கிட்டுப் பேசும் போது என்ன கூறினார்?

"(இந்தித்) திணிப்பு கூடவே கூடாது. இராண்டாவதாகக் காலவரம்பற்ற நீண்ட காலத்திற்கு - அது எவ்வளவு காலம் என்பது எனக்குத் தெரியாது-ஆங்கிலத்தைக் கூட்டு ஆட்சி மொழியாக (அசோஸியேட் அடிஷனல் லாங்குவேஜ்) நீடிக்க விரும்புகிறேன். மக்கள் விரும்புகிற வரை ஆங்கிலத்தை நீடிக்க வைப்பேன். ஆங்கிலம் இனி நீடிக்கக் கூடாது என்கிற முடிவினை நான் இந்தி பேசும் மக்களிடம் விடமாட்டேன். அதை முடிவு செய்ய வேண்டியது இந்தி பேசாத மக்களே"

என்று 1959 ஆம் ஆண்டு நேரு சொன்னார். அதே நேரு 1963ஆம் ஆண்டு நாடாளுமன்றத்தில் கூறினார்.

"நான் அன்று கொடுத்த-இன்றும் கடைப் பிடிக்கிற - வாக்குறுதிக்கான காரணம் அல்லது நோக்கம் என்ன? இந்தி பேசாத மக்களின் பூரண சம்மதத்தைப் பெறுகிற வரையில் ஆங்கிலம் அல்லது இந்தி நிலையில் எந்தவித மாற்றமும் செய்யப்படக்கூடாது. ஏனெனில் நாடாளுமன்றத்திலோ வெளியிலோ மெஜாரிடி பலத்தை வைத்துக் கொண்டு அவர்களால் ஒப்புக்கொள்ள முடியாத மாற்றம்

செய்யப்பட்டுவிடக்கூடும் என்று இந்தி பேசாத மக்களிடத்திலே நிலவும் பயத்தைப் போக்குவதற்காகவே நான் அப்படி வாக்குறுதி கொடுத்தேன்''

— இது 1963-ல் நேரு நாடாளுமன்றத்திலே பேசியது.

அந்த உறுதிமொழியிலே உள்ள முக்கியமான அம்சங்கள் என்ன ?

இந்தித் திணிப்பு கூடவே கூடாது.

ஆங்கிலம் கூட்டு ஆட்சி மொழியாக நீடிக்கவேண்டும்.

மக்கள் விரும்புகிறவரை ஆங்கிலத்தை நீடிக்க வைப்பேன் அதாவது ஆங்கிலம் நீடிப்பதற்குக் காலவரம்பே கிடையாது.

ஆங்கிலம் கூடாது என்ற முடிவினை எடுக்க வேண்டியவர்கள் இந்தி பேசுகிற மக்கள் அல்ல; இந்தி பேசாத மக்கள்தான்.

—இவையெல்லாம் 1963ல் பண்டித நேரு நாடாளுமன்றத்திலே பேசிய பேச்சின் சுருக்கங்கள் ஆகும்.

அதைத் தொடர்ந்து 1965 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 12 ஆம் தேதியன்று பிரதமராக இருந்த லால்பகதூர் சாஸ்திரி.

''இந்தி பேசாத மக்கள் மீது இந்தியைத் திணிக்கும் பிரச்சனையே கிடையாது என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். 1965 ஜனவரி 26 ஆம் தேதிக்குப் பிறகும் ஆங்கிலம் தொடர்ந்து நீடிக்கும்'' என்று நாடாளுமன்றத்திலே சொன்னார்.

அதன் பின்னர் இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் பிரதமர் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருந்த பதினாறு ஆண்டுக் காலத்தில் பலமுறை இந்தித் திணிப்பு இல்லை; இந்தி பேசாத மக்கள் விரும்புகிறவரை ஆங்கிலம் நீடிக்கும் என்ற உறுதிமொழியை- நேருவின் உறுதி மொழியைக் காப்பாற்றியே தீருவேன் என்று தெரிவித்தார்.

இன்றைய பிரதமர் நிலை என்ன?

இன்றைக்கு நிலைமை என்ன? இன்று நேரு இல்லை; லால் பகதூர் இல்லை; இந்திரா காந்தி அம்மையார் இல்லை ;இளம் பிரதமர் ராஜீவ் காந்தி பொறுப்பிலே இருக்கிறார். அவர் மூன்று மாதங்களுக்கு முன்பு என்ன பேசினார்?

20-9-85-ல் பிரதமர் ராஜீவ்காந்தி டெல்லியிலே மத்திய இந்திக் குழுவிலே பேசினார். அதிகாரிகளெல்லாம் வீற்றிருக்கின்ற குழு அது.

ஃ விஞ்ஞானமும்—விஞ்ஞான தொழில் நுட்பங்களும் மிக அதிகமாக வளர்ந்து வருகின்றன. அதற்கேற்ப இந்தியில் கலைச்சொற்கள் (டெக்னிகல் டேர்ம்ஸ்) அதிகமாகப் பெருகவேண்டும்.

ஃ இந்திப் புதிய சொற்கள், இந்தி பேசாத மக்களும் ஏற்கும் வகையில் எளிமையாக இருக்க வேண்டும்.

ஃ தென்னாட்டு மக்கள் சமஸ்கிருதத்தை எளிமையாகப் புரிந்து கொள்வார்கள். அதற்கேற்றாற்போல் தென்னக மக்கள் புரிந்து கொள்ளக்கூடிய வகையில் இந்தப் புதிய சொற்களை உருவாக்க வேண்டும்.

ஃ நாட்டை ஒற்றுமைப்படுத்துவதில் இந்தி மொழிக்கு முக்கிய பங்கு உண்டு.

ஃ இந்தியைத் திணிப்பதில் அவசரப்பட்டு விடக் கூடாது. மெல்ல மெல்ல மெதுவாக இதைச் செய்ய வேண்டும்.

ஃ அரசு அலுவல்களில் இந்தியை அதிகமாகப் பயன் படுத்த வேண்டும். இந்தியில் பணிகளைச் செய்யக் கூடிய

ஊழியர்களின் இந்தி மொழி அறிவைத் தகுந்த அடிப்படையில் நிர்ணயிக்க வேண்டும்.

— இது டெல்லியில் ராஜீவ் காந்தி பேசியது. அதை 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' ஏடு அன்றைக்கு வெளியிட்டது. அந்த ஆங்கில ஏட்டில்

Prime Minister Rajiv Gandhi favours a policy of persuasion to make Hindi popular among the people.

Addressing the 'Raj Bhasha Sammelan' (Official Language Conference) of Secretaries and other Government officials, Heads of public sector undertakings and Nationalised Banks, Mr. Rajiv Gandhi called for an all-out effort to secure public support for popularising Hindi as the Government's efforts alone could not get Hindi its rightful place as the official and Link Language.

The Prime Minister said while statistics showed that by and large over 80 percent of the Government employees know Hindi. The use of Hindi in official work was not up to the mark. Hence the fault had to be detected and remedial actions taken. He deprecated the tendency among Government servants to register their names as Hindi-knowing, just for earning extra - increments and allowances"

—என்பது சதவிகிதம் இந்தி படிக்கிறார்கள் என்று சொல்லப்பட்டாலுங் கூட அது ஒரு போலித் தனமான புள்ளி விவரமே தவிர உண்மையானதல்ல. வெறுஞ் சலுகைகளுக்காக, சில ஆதாயங்களுக்காக இந்தி படிப்பதாகக் காட்டிக் கொள்கிறநிலை மாற்றப்பட்டு இந்தி படிக்கின்ற அந்த உணர்வை

—அந்த அவசியத்தை ஏற்படுத்தியாக வேண்டும் என்று அதிகாரிகளே வைத்துக் கொண்டு முக்கியமான வங்கிகள், ஆயுள் காப்பீட்டுக் கழக அதிகாரிகள் இவர்களையெல்லாம் வைத்துக் கொண்டு, ராஜீவ் காந்தி செப்டம்பர் திங்களில் இப்படிப்பட்ட ஓர் உரையை ஆற்றுகிறார் என்றால், நேருவினுடைய வாக்குறுதி, இந்திரா காந்தி தொடர்ந்து அளித்த வாக்குறுதி இவைகளையெல்லாம் ராஜீவ் காந்தியே மீறினார் என்று குற்றஞ்சாட்டுவதில் நிச்சயமாகத் தவறு இருக்க முடியாது.

நான் மத்தியிலே உள்ள இளம் பிரதமர் ராஜீவ் காந்தி அவர்களுக்கு அன்போடு சொல்லிக்கொள்ள விரும்புகின்றேன். நீங்கள் பஞ்சாபோடு ஒப்பந்தம் செய்து கொண்டீர்கள். பஞ்சாப் ஒரு தனி நாடல்ல. இருந்தாலும் பஞ்சாபிலே ஆளுங் கட்சி கூட அல்ல — இன்றைக்கு ஆளுங் கட்சியாக இருக்கலாம். அன்றைக்கு எதிர்க்கட்சி அகாலிதளம். அந்த எதிர்க்கட்சித் தலைவர்களை அழைத்து ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டீர்கள். எதற்காக? அவர்களுடைய பல கோரிக்கைகளுக்காக. பஞ்சாப் மாநிலத்தினுடைய சுயமரியாதை காக்கப்பட வேண்டும் என்று எழுந்த பல கோரிக்கைகளுக்காக. பஞ்சாப் தனிநாடு அல்ல. ஆனாலும் பஞ்சாப் மாநில எதிர்க்கட்சித் தலைவர்களை அழைத்து — டெலிவிஷனெல்லாம் எடுக்கப்பட்டு உலக மக்களெல்லாம் பார்க்கின்ற அளவிலே அக்காட்சிகள் ஒளிபரப்பப்பட்டு அந்த ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்டது.

அதைப் போலவே அஸ்ஸாம் - தனி நாடல்ல; சின்னஞ்சிறு மாநிலம். என்றாலுங்கூட ஆறாண்டுக் காலம் தொடர்ந்து போராடி, ஏறத்தாழ மூவாயிரம் பேரைப் பலி கொடுத்து- அஸ்ஸாம் என்பது கூட அல்ல அவர்களுடைய மொழியின் பெயரால் அந்த மாநிலத்தை 'அஸ்ஸோம்' என்று தான் அழைப்பார்கள் அவர்கள். அந்த அஸ்ஸோம் மக்களின் போராட்டத்தை முன்னின்று நடத்தியவர்கள் மாணவர்கள். 1985-ல் தமிழகத்தில் மொழிப்புரட்சியை முன்னின்று நடத்திய மாணவர்களைப் போல அஸ்ஸாமில் ஓரு போராட்டத்தை

முன்னின்று நடத்தியவர்கள்-மக்கள் இயக்கத்தை நடத்தியவர்கள் மாணவர்கள். அந்த மாணவர்களை அழைத்து அவர்களோடு இளம்பிரதமர் ராஜீவ்காந்தி பலமணிநேரம் பேசி ஓர் ஒப்பந்தஞ்செய்து கொண்டார்.

மத்திய அரசு மாநிலக் கட்சியோடு ஒப்பந்தஞ் செய்து கொள்ளுகிறது என்பது ஏதோ ஒரு புதிய நாட்டோடு-அல்லது வேறு ஒரு விரோதமான நாட்டோடு இருந்த பிரச்சினைகளெல்லாந் தொலைந்து - ஒப்பந்தஞ் செய்து கொண்டதைப் போலச் செய்திகள் வெளிவந்தன.

அப்படிப்பட்ட நிலை தமிழ் நாட்டிலும் எதிர் காலத்திலே மொழிப் பிரச்சினையிலும் ஏற்படக் கூடும் என்பதை நான் ராஜீவ் காந்தி அவர்களுக்கு எடுத்துக்காட்டக் கடமைப் பட்டிருக்கிறேன். ஏனென்றால் இந்தி எதிர்ப்பு எத்தனை பேரை பலி வாங்கியிருக்கிறது. என்கிற கணக்கை- எத்தனை பேர் ரத்தம் சிந்தினார்கள் என்ற அந்த வரலாற்றைக் - காலையிலே தி. மு. கழகப் பொதுச் செயலாளர் பேராசிரியர் அவர்கள் இங்கே விளக்கியிருக்கக் கூடும்.

எனவே அந்த வகையிலே சொல்லுகின்றேன், மொழியைப் பறிகொடுத்துவிட்டு தமிழன் இங்கே இளித்தவாயனாக இருக்கத் தயாராக இல்லை!

வடக்கே உள்ளவர் தெளிவாக உணர வேண்டும்.

வடக்கே இருப்பவர்கள் தமிழ்நாட்டில் நடைபெறுகின்ற தேர்தல் முடிவுகளை வைத்து ஏமாந்து போக வேண்டாம். நான் அவர்களுக்குச் சொல்கின்றேன். இந்தியாவினுடைய விடுதலைப் போராட்டம் தொடங்கிய நேரத்தில் - கவிச்சக்கர வர்த்தி பாரதி பாடியதைப் போல முப்பது கோடி மக்கள்- அந்த முப்பது கோடி மக்களும் சிறைச்சாலைகளுக்குச் சொன்று

இந்திய விடுதலைக்காகப் போராடி தியாகங்களைச் செய்யவில்லை. அந்த முப்பது கோடி மக்களின் சார்பாக இந்தியா முழுமைக்கும் அன்று சிறைச்சாலைக்குச் சென்றவர்கள் இதோ அமர்ந்திருக்கிற பெரியவர் கிருஷ்ணசாமி பாரதி அவர்களைப் போல இருபதாயிரம் பேர்; அல்லது முப்பதாயிரம் பேர்தான்.

ஏனவே தேர்தலிலே வாக்களிக்கின்ற மக்களைக் கணக்கிலே வைத்துக் கொண்டு - நாம் இந்தியைத் திணித்தால், எப்படித் தேர்தலிலே மக்கள் வாக்களிக்கிறார்களோ அதே போலத்தான் இப்போதும் வாக்களிப்பார்கள் என்று வடக்கே இருப்பவர்கள் கோட்டை கட்டத்தேவையில்லை.

முப்பது கோடி மக்களும் போராடி இந்திய விடுதலை பெறவில்லை; முப்பதினாயிரம் பேர் தங்களுடைய உயிரைத் திரணமாக மதித்து விடுதலை பெற்றார்கள்.

அதைப் போலத் தமிழகத்திலும் ஒரு பத்தாயிரம் பேர் உயிருக்குத் துணிந்து விட்டால், அரசியல் சட்டத்தின் 17-வது பிரிவு — மொழிப்பிரிவு மாற்றப் பட வேண்டும் என்கிற போராட்டம் எழுமேயானால் - இந்தியை நாங்கள் ஏற்றுக் கொள்ள மாட்டோம்; இப்போது கூட இந்தியைத் திணிக்காதே என்று சொல்கிறோம்; இனிமேல் இந்திக்குத் தமிழ் நாட்டில் வேலையே இல்லை என்று சொல்லக் கூடிய காலம் வந்தே தீரும்.

இந்தியை இப்பொழுது மறைமுகமாகத் திணிக்கவில்லையா? மத்திய பள்ளிகள் - சென்ட்ரல் ஸ்கூல் என்ற பெயரால் இன்றைக்குத் தமிழகத்திலே எங்கணும் பள்ளிகள் தொடங்கப் படுகின்றனவே எதற்காக?

கல்வியை இன்றைக்குப் பொது அதிகாரப் பட்டியலுக்குக் கொண்டுவந்து விட்டார்கள் தட்டிக் கேட்க நாதியில்லை. எதை எடுத்துக் கொண்டாலும் பரவாயில்லை; நம்முடைய அதிகாரம்

நிலைத்தால் போதும்; மாநிலத்தின் எல்லா அதிகாரத்தையும் ஏடுத்துக் கொண்டாலும் பரவாயில்லை என்று எண்ணுகின்றவர்கள் தமிழக ஆட்சியிலே இருக்கின்ற காரணத்தால் அதைப் பற்றிக் கவலைப்பட அவர்கள் முன்வரவில்லை.

எனவே கல்வியைப் பொதுப் பட்டியலுக்குக் கொண்டு வந்து, மத்திய அரசின் சார்பில் தமிழகத்திலே உருவாக்கப்படுகின்ற பள்ளிகளில் இந்தியைக் கட்டாயமாக்கி, மற்ற பள்ளிகளில் இடங்கிடைக்காத மாணவர்கள் இந்தி படித்தே தீர வேண்டும் என்ற தவிர்க்க முடியாத சூழ்நிலைக்கு ஆளாகி, மத்திய பள்ளிகள் எதிர்காலத்தில் இந்தியைத் தவிர்க்க முடியாத நிலையில் கட்டாயமாகப் பரப்புகின்ற பிரச்சார சாதனங்களாக தமிழகத்திலே ஏற்படுவதற்கான சூழ்ச்சி இன்றைக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. எனவே முன்புறமாக வந்தால் தான் எதிரி என்பது அல்ல. அவனைவிட மோசமானவன் பின் புறமாக வருகின்ற எதிரி. இந்தி திணிக்கப்பட்டால்தான் எதிர்ப் போம் என்பது அல்ல. அது பின்புறமாக - மறைமுகமாக நம்மைக் கடிக்க வருகின்ற பாம்பாக, நம்மைக் கொல்ல வருகின்ற புலியாக வருமேயானால், அதைத் தீர்த்துக் கட்ட வேண்டிய பொறுப்பு ஒவ்வொரு தமிழ் மகனுக்கும் உண்டு என்கின்ற காரணத்தினால் இங்கே அடிகளார் குறிப்பிட்டதைப் போல, நம்முடைய அண்ணா அடிக்கடி எடுத்துக் காட்டியதைப் போல, "இருப்பது ஓர் உயிர்; அது போகப்போவது ஒருமுறை. அது ஒரு நல்ல காரியத்துக்காகப் போகட்டும். அந்த நல்ல காரியம் தமிழைக் காப்பாற்ற இந்தியை எதிர்த்து வீழ்த்த என்பதாக இருக்கட்டும்!